# காண்டாமிருகம்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com www.tamilacademy.com

# காண்டாமிருகம்

நம் கற்பனைக் கதையில் வந்த ஒற்றைக் கொம்பு (யுனிகார்னாஸ் குடும்பம்) விலங்கு குதிரை. ஆனால் உண்மையில் ஒற்றைக் கொம்பினைக் கொண்ட விலங்கு எதுவென்றால் அது காண்டாமிருகம். பெரிய உடல், சிறிய மூளை, குட்டைக் கால், மும்மடிப்புத் தோல், மூக்கில் கொம்பு என்று பல்வேறு தனிச் சிறப்பினைக் கொண்ட இவ்விலங்கினம் தற்போது அழிவினை நோக்கிச் செல்கிறது என்பது தான் உண்மை. இக்கட்டுரையில் காண்டாமிருகத்தின் வாழ்வியலைப் பற்றிப் பார்ப்போம்.



இவ்வுலகில் தோன்றிய உயிரினங்கள் அனைத்தும் பல்வேறு மாற்றங்களை அடைந்துள்ளன. ஆனால் சுமார் ஐம்பது மில்லியன் ஆண்டுகளுக்கும் மேலாக அதிக மாற்றம் அடையாமல் வாழும் உயிரினம் என்றால் அது காண்டாமிருகம் தான். காண்டா என்னும் சொல்லுக்கு "மிகப்பெரிய" என்பது பொருளாகும். கிரேக்கத்தில் 'ரைனோகெரசு' (Rhinoceors) என்பர். ரைனோசு என்பதற்கு "மூக்கு" என்றும், கெரஸ் என்பதற்குக் "கொம்பு" என்றும் பொருள். ஆங்கிலத்தில் ரைனோசெர்ட்டி (Rhinoceroserdi) என்று அழைப்பர். காண்டாமிருகத்தினை காண்டாவிருகம், காண்டாமிருகம், மூக்குக் கொம்பன், உச்சிக்கொம்பன் மற்றும் கொந்தளம் என்று பல பெயர்களைக் கொண்டு அழைப்பர். காண்டாமிருகம் ரைனோசெரோடிடே (Rhinocerotidae) என்ற குடும்பத்தைச் சேர்ந்தவையாகும்.

காண்டாமிருகம் (இயற்கைச்சூழலில்) ஆப்பிரிக்கா, இந்தியா, ஜாவா மற்றும் சுமத்ரா தீவுகளில் வாழ்கின்றன. நிலத்தில் வாழும் விலங்குகளிலேயே காண்டாமிருகம் தான் இரண்டாவது மிகப்பெரிய பாலூட்டி வகையாகும். காண்டாமிருகங்கள் தனித்து வாழ்வதை விரும்புகின்றன. இவை ஒற்றைப்படைக் குளம்பி வகையைச் சேர்ந்தவையாகும். தாவர உண்ணி வகையைச் சார்ந்த காண்டாமிருகம் புற்கள், இலைகள், பழங்கள் மற்றும் கிழங்குகள் போன்றவற்றை உணவாக உண்ணுகின்றன. பெரும்பாலும் இரவு நேரங்களிள் உணவைத் தேடிச் செல்கின்றன.

காண்டாமிருகத்தின் உடல் 1 . 8மெட்ரிக் டன் எடையினைக் கொண்டது. காண்டாமிருகங்கள் பெரிய உடலினைக் கொண்டிருந்தாலும் நாற்பது கிலோமீட்டர் வேகத்தில் ஓடும். மிக நுண்ணிய மோப்பத் திறனும், கேட்கும் திறனும் கொண்டது. ஆனால் பார்வைத் திறன் மிகக் குறைவாகும். தனது பற்களை உணவு உண்பதற்கு மட்டுமல்லாமல் சண்டையிடுவதற்கும் பயன்படுத்துகின்றன.

ஆப்பிரிக்க காண்டாமிருகங்களுக்கு முன் பற்கள் கிடையாது. ஆகையால் முன்கடைவாய்ப் பற்களைக் கொண்டே உணவை மென்று உண்ணும். இனப்பெருக்கம் மற்றும் எல்லையைக் காத்துக்கொள்ள சண்டையிடும் போது எதிரியினைப் பற்களால் தாக்கிக் கொன்று விடும். காண்டாமிருகத்தின் உடல் பருமனைக் கொண்டு மூளையின் எடையை ஒப்பிட்டால் பாலூட்டி வகைகளிள் சிறியது என்றே கூறலாம். இதன் மூளையின் எடை 400- 600 கிராம் தான் இருக்கும். நன்கு வளர்ந்த ஆண் காண்டாமிருகம் பெண் காண்டாமிருகத்தை விடக் கூடுதல் எடையைக் கொண்டிருக்கும். ஆண் காண்டாமிருகம் 2200 முதல் 3000 கிலோ எடையும், பெண் காண்டாமிருகம் 1600 கிலோ எடையிலும் இருக்கும். காண்டாமிருகத்திற்குக் கோபம் வந்தால் உடலெல்லாம் இரத்தம் போல் சிவப்பாக வியர்த்துக் கொட்டும். மிகவும் மூர்க்கத்தனமாகக் காணப்படும்.



காண்டாமிருகங்களின் சிறப்புகளில் ஒன்றாக அதன் தோலைக் கூறலாம். இதன் தோல் வெளிப்புறம் தடித்து உட்புறம் மூன்று மடிப்புகளைக் கொண்டிருக்கும். இத்தோல் 1.5 முதல் 5.0 செ.மீ தடித்துக் காணப்படும். தோலின் மேல் பகுதியில் பழுப்பு நிறமும் மடிப்புகளுக்கிடையே வெளிறிய சிவப்பு நிறமும் காணப்படுகின்றன. காண்டாமிருகத்தை சதுப்பு நில விலங்கு என்றும் கூறுவர். இவ்விலங்கு சகதியில் படுத்துப் புரள்வதில் அலாதிப் பிரியம் கொண்டது. பகற்பொழுதின் அதிக நேரத்தை சகதியில் புரள்வதிலே செலவிடுகின்றன. இச்செயலின் மூலம் வெயிலின் தாக்கம், பூச்சிகள், பேன், மற்றும் உண்ணிகளின் தொல்லைகளிலிருந்து மீள்கின்றன. மேலும் தோலைப் பாதுகாத்துக் கொள்கின்றன. இவ்விலங்கு உயிரோடு இருக்கும் போது தோல் மிருதுவாகவும் இறந்த பின் கடினமாகவும் மாறிவிடும். பொதுவாக காண்டாமிருகத்தின் உடலில் எண்பத்திரெண்டு அணுக்கோல்கள் (Chromosomes) இருக்கும். ஆனால் கறுப்புக் காண்டாமிருகத்திற்கு எண்பத்தினான்கு நிறமிகள் உள்ளன. இது தான் பாலூட்டி வகைகளிலேயே அதிக அணுக்கோல்களையுடைய விலங்காகும். காண்டாமிருகம் பதினைந்து வருடங்களுக்குப் பிறகே இனப்பெருக்கத்திற்குத் தயாராகின்றன.

இதற்கு ஆண்டு முழுவதுமே இனப்பெருக்கத்திற்கு உகந்தகாலம் தான். மற்ற விலங்கினத்தைப் போல் இல்லாமல், இவ்வினத்தில் பெண் காண்டாமிருகம் தான் இணை சேர்வதற்கான செயலினைச் செய்கின்றன. இதன் சூல்காலம் பதினாறு மாதங்களாகும். ஒரு கன்றினை மட்டுமே ஈனும். அடுத்த கன்றினைப் பெறுவதற்கு 34 முதல் 51 மாதங்களாகும். குட்டி அறுபது கிலோ எடை வரை



இருக்கும். ஒரு வாரம் வரை தன் குட்டிக்கு பாலூட்டும். பிற காண்டாமிருகம் கன்றை நெருங்கினால் தாய் விரட்டி அடிக்கும். தனது கன்றினை நான்கு வருடங்கள் காக்கும். தாயினைப் பிரிந்த கன்று தன் வயது ஒத்த ஆண்காண்டாமிருகத்துடன் சேர்ந்து கொள்ளும். கன்றுகள் ஒன்றை ஒன்று மோப்ப சக்தி மூலம் அறிந்து கொள்கின்றன. பருவநிலை அடையும் வரை பெரிய காண்டாமிருகங்களிடம் இருந்து விலகியே இருக்கின்றன. காண்டாமிருகத்தை ஆந்த்ராக்ஸ் (anthrax isease) என்ற நோய் தாக்குகின்றன. காண்டாமிருகங்களுக்கு இயற்கை கொன்றுண்ணிகள் என்று எதுவுமில்லை. மனிதன் தான் மிகப் பெரிய கொன்றுண்ணியாக இருக்கின்றான். இதன் கொம்பிற்காக வேட்டையாடிக் கொல்கிறான். காண்டாமிருகம் எப்போதும் மலம் கழிக்க ஒரே இடத்தையே பயன்படுத்துவதால் வேட்டையாளர்கள் அவ்விடத்திற்கு அருகில் பதுங்கியிருந்து காண்டாமிருகத்தை எளிதில் கொன்று விடுகின்றனர். காண்டாமிருகத்தின் கொம்பினைக் கத்தியின் கைப்பிடியாகவும், சீனாவில் மருந்துப் பொருளாகவும் பயன்படுத்துகின்றனர். இதன் வாழ் நாள் முப்பத்தைந்து முதல் ஐம்பது ஆண்டுகள் ஆகும்.

காண்டாமிருகங்களைப் பிற விலங்குகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதில் அதன் கொம்பு பெரும்பங்கு ஆற்றுகிறது என்றே கூறலாம். பொதுவாக விலங்குகளுக்குக் கொம்புகள் தலையில் தானே வளரும். ஆனால் காண்டாமிருகத்திற்கு மூக்கின் நடுக்கோட்டில் ஒன்று அல்லது இரண்டு கொம்புகள் வளரும். இக்கொம்பு கெரட்டின் (keratin) என்ற வேதிப்பொருளால் ஆனது.

காண்டாமிருகத்தின் கொம்பு எலும்புகளால் ஆனதல்ல, தோலிலிருந்து உருவாகிறது. கொம்பினை அழுத்தப்பட்ட முடி (கடினமான முடி) என்றும் கூறுவர். கொம்பின் நீளம் 25 செ.மீ. அதிகபட்சமாக 57.2 செ.மீ. வரை இருக்கும். இக்கொம்பு கறுப்பு நிறத்தில் இருக்கும். கன்றுகள் பிறந்து ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு கொம்புகள் வெளிப்படும். மற்ற விலங்கினத்தைப் போல் இல்லாமல் காண்டாமிருக இனத்தில் ஆண்காண்டாமிருகம், மற்றும் பெண்காண்டாமிருகம் இரண்டிற்கும் கொம்பிருக்கும்.



காண்டாமிருகம் தன் கொம்பைச் சண்டையிடுவதற்கும் மண்ணில் கிழங்குகளைத் தோண்டுவதற்கும் மற்றும் மணற்பரப்புகளில் தனக்குத் தேவையான நீரைத் தோண்டுவதற்கும் பயன்படுத்துகின்றன. கொம்புகள் உடைந்தாலோ, முறிபட்டாலோ வளர்ந்து கொண்டே இருக்கும்.

காண்டாமிருகங்களை அதன் கொம்புகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டு வகைகளாகப் பிரித்துள்ளனர். அவை

1. ஒற்றைக் கொம்பு காண்டாமிருகம் (இந்திய காண்டாமிருகம்)


2. இரட்டைக் கொம்பு காண்டாமிருகம் (ஆப்பிரிக்க காண்டாமிருகம்)



ஜாவா காண்டாமிருகம்



சுமத்ரா காண்டாமிருகம்




## இந்திய காண்டாமிருகம்:

ஐரோப்பியர்கள் முதன் முதலில் அறிந்த மூக்குக்கொம்பன் (காண்டாமிருகம்) எதுவென்றால் அது இந்திய காண்டாமிருகமாகும். இவை இந்தியாவில் அசாம் மாநிலத்திலும் மற்றும் இமயமலையின் அடிவாரத்திலுள்ள புல்வெளிகளிலும் அதன் அருகிலுள்ள காடுகளிலும் இந்தியாவின் அண்டை நாடான நேபாளம், பூட்டான் போன்ற நாடுகளிலும் இந்திய காண்டாமிருகம் வாழ்கின்றன.



தற்போது உலகிலுள்ள மூக்குக் கொம்பன்களில் மிகப்பெரியவை (உடலளவில்) இரண்டு உண்டு. அதில் ஒன்று இந்திய காண்டாமிருகமாகும். இதன் உயரம் 170 செ.மீ., சுற்றளவு 335செ.மீ. ஆகும். இவ்விலங்கினம் இரவு மற்றும் விடியற்காலையில் தான் உணவைத் தேடிச் செல்லும். பெரும்பாலும் இது தன் சீறுநீர் கலந்த தண்ணீரையே குடிக்கும். தன் இனத்தைத் தொடர்பு கொள்ள பத்து விதமான ஒலிகளை எழுப்புகின்றன. ஆண்காண்டாமிருகம் தனது எல்லையாக இரண்டு முதல் எட்டு சதுர கிலோமீட்டர் வரைக் கொண்டிருக்கும். இது சதுப்பு நிலத்தில் வாழ்வதால் நன்றாக நீந்தும். இந்திய காண்டாமிருகம் தனித்து வாழும் இயல்பைக் கொண்டதாகும். ஆனால் குட்டி ஈன்ற பின் தாய், குட்டி மற்றும் இனப்பெருக்கம் செய்த பிணை (ஆண் காண்டாமிருகம்) ஆகியவை ஒன்றாக வாழும்.

உணவு உண்ணும் போது தன் குட்டி உண்ணுவதற்கு ஏதுவாக புற்களைத் தாய் காண்டாமிருகம் தன் காலாலோ அல்லது உடலினைக் கொண்டு அமுக்கிப்பிடித்துக் கொள்ளும். நான்கு வருடத்திற்குப் பின் தன் தாயை விட்டு தனித்துச் செல்லும். இந்திய காண்டாமிருகம் அசாம் மாநிலத்தின் மாநில விலங்காகும்.

### சுமத்ரா காண்டாமிருகம்:

இந்திய காண்டாமிருகங்கள் பொதுவாக ஒரு கொம்பினைக் கொண்டிருக்கும். இதற்கு விதிவிலக்காக சுமத்ரா காண்டாமிருகத்திற்கு இரண்டு கொம்புகள் உள்ளன. ஆசிய காண்டாமிருகங்களிலேயே சிறிய இனம் சுமத்ரா காண்டாமிருகமாகும். பெண்காண்டாமிருகமும் ஆண்காண்டாமிருகமும் ஒரே எடையினைக் கொண்டது. இதன் எடை 850 கிலோவாகும். தலை முதல் தோள் பட்டை வரை 2.5 மீ முதல் 1.5மீ நீளம் கொண்டது. மலைப் பகுதியில் வாழ்வதற்கு (குளிரினைத்தாங்குவதற்கு) உகந்ததாக உடல் முழுவதும் (சிறியளவில்) முடியினைக் கொண்டது. சுமத்ரா காண்டாமிருகம் தற்போது இருநூற்றி எழுபத்தைந்து (275) மட்டுமே உள்ளன. இவை இந்தியாவில் அசாம் மாநிலம் மற்றும் இந்தோனேசியா, சுமத்ரா, தாய்லாந்து போன்ற நாடுகளில் வாழ்கின்றன.



### ஜாவா காண்டாமிருகம்:



இதன் உடலின் நீளம் இரண்டு முதல் மூன்று மீட்டராகும். இதன் எடை 9 0 0 - 2300 கிலோ கிராமாகும். பெண்காண்டாமிருகம் மற்றும் ஆண்காண்டாமிருகம் இரண்டிற்கும் வெட்டுப் பற்கள் உள்ளன. ஜாவா காண்டாமிருகத்தில் ஒரு இனப்பெருக்கத்திற்கும் அடுத்த இனப்பெருக்கத்திற்குமான இடைவெளி மூன்று முதல் ஐந்து வருடங்களாகும். இவ்வினத்தில் தற்போது ஐம்பது காண்டாமிருகங்கள் மட்டுமே உள்ளன.

இரட்டைக் கொம்புகளையுடைய ஆப்பிரிக்க காண்டாமிருங்களான கறுப்பு மூக்குக்கொம்பன் மற்றும் வெள்ளை மூக்குக்கொம்பனைப் பற்றிப் பார்ப்போம்.

### கறுப்பு மூக்குக்கொம்பன்:

தன் நிறத்தினைக் கொண்டு தனக்கென ஒரு பெயரினைப் பெற்றது கறுப்பு மூக்குக்கொம்பன். முழு வளர்ச்சி அடைந்த கறுப்பு மூக்குக்கொம்பன் 800 முதல் 1400 கிலோ கிராம் எடையும் அதிகபட்சமாக 1820 கிலோகிராம் எடையும் இருக்கும். இவ்விலங்கு இரண்டு கொம்புகளைக் கொண்டது. இதில் பெரிய கொம்பு மூக்கின் நுனிப்பகுதியிலும், சிறிய கொம்பு அதற்கு அடுத்ததாகவும் இருக்கும். இக்கொம்பு 50 செ.மீ. நீளம் கொண்டது. கறுப்பு மூக்குக்கொம்பன் வாயின் முன் பகுதி சற்று குவிந்து கூர்மையாக இருக்கும். இது இலைகளையும் கொப்புகளையும் பற்றி உண்ணுவதற்கு உதவியாக உள்ளது. கறுப்பு மூக்குக்கொம்பன் ஆப்பிரிக்க விலங்காகும்.



### வெள்ளை மூக்குக் கொம்பன்:

ஆப்பிரிக்கா மொழியில் ஒய்டு (wide) என்னும் சொல்லுக்கு பரந்த அல்லது விரிந்த என்பது பொருளாகும். இதில் ஒய்டு (wide) என்னும் சொல்லைத் தவறுதலாக வெள்ளை (white) என்று புரிந்து கொண்டு வெள்ளை மூக்குக் கொம்பன் என்று அழைக்கப்படுகின்றன. நிலவாழ் உயிரினங்களில் யானைக்கு அடுத்தபடியாக வெள்ளை மூக்குக் கொம்பன், இந்தியக்காண்டாமிருகம் மற்றும் நீர்யானை ஆகியவை தான் உலகிலேயே எடை மிகுந்த விலங்குகளாகும்.



வெள்ளை காண்டாமிருகத்தின் உடல் சாம்பல் நிறம், வெளிறிய பழுப்பு அல்லது மஞ்சள் நிறத்தில் இருக்கும்.

வெள்ளை காண்டாமிருகம் பெரிய உடலும், சிறிய கழுத்தும், பெரிய முகமும், வாயின் உதடுகள் அகலமாகவும், பரந்த நெஞ்சுப்பகுதியும் கொண்டது. வெள்ளை காண்டாமிருகத்தின் எடை 3000 கிலோ முதல் 4,500 கிலோ வரை இருக்கும். இதன் முன்பகுதியிலுள்ள கொம்பின் நீளம் ஏறத்தாழ 90 செ.மீ. முதல் 150 செ.மீ. வரை இருக்கும். உடலில் முடி ஏதும் இருப்பதில்லை. ஆனால் வாலிலும், காதுமடலின் ஓரத்திலும் முடியிருக்கும். வெள்ளை மூக்குக்கொம்பன் "கறுப்பு" மூக்குக் கொம்பனை விடப் பெரியதாக இருக்கும். மற்ற காண்டாமிருகங்களைப் போல் இல்லாமல் வெள்ளை காண்டாமிருகத்தின் முதுகில் திமில் போன்ற அமைப்பு இருக்கும்.

தென்னாப்பிரிக்காவிலுள்ள தென் வெள்ளை காண்டாமிருகத்தின் எடை 2300 கிலோகிராமாகும். தற்போது இந்த தென் வெள்ளைக் காண்டாமிருகத்தின் மொத்த எண்ணிக்கை 14,500 என்ற அளவிலேயே உள்ளன. தற்போது 2018 கணக்கெடுப்பின் படி வட வெள்ளைக் காண்டாமிருகத்தில் இரண்டு பெண் காண்டாமிருகம் மட்டுமே உள்ளன. கடைசியாக இருந்த வெள்ளை ஆண் காண்டாமிருகம் மார்ச் 2018 - ல் உயிரிழந்தது.

உலகில் தற்போது இருபத்திமூன்றாயிரம் (23, 000) காண்டாமிருகங்கள் மட்டுமே உள்ளது. காண்டாமிருகம் அருகி (அழிந்து) வரும் விலங்கினமாகும்.




பிற விலங்குகளிடமிருந்து காண்டாமிருகத்தைத் தனித்துக் காட்டுவது அதன் மூக்குக்கொம்புகள் தான். ஆனால் அக்கொம்பே காண்டாமிருகத்திற்கு ஆபத்தாய் வந்து விட்டது. இவ்விலங்கினத்தைக் கொம்பிற்காக வேட்டையாடுவதை மனிதயினம் என்று நிறுத்துகின்றதோ அன்றே இவ்வினம் (காண்டாமிருகம்) தளிர்க்கும்.

***

மூக்கில் கொம்புடைய விலங்கினை
கற்பனைக் கதையில் தான் பார்த்திருகிறேன்.
ஆனால் காண்டாமிருகத்தைக் கண்டதும்
நிஜம் என அறிந்தேன்.
உலக உயிரினங்கள் பல்வேறு காரணத்திற்காக
தன்னை மாற்றி தகவமைத்துக் கொண்டது,
ஆனால் ஐம்பது மில்யன் ஆண்டுகளாக

**காண்டாமிருகம்**

அதிக மாற்றம் அடையவில்லை என்பது
அதிசயத்தின் உச்சமே!

விலங்குகள் மட்டுமல்ல நாமும்
சூழல் மாற்றங்களுக்கு எற்ப வாழும்
முறையினைக் கற்றுக்கொண்டே பயணிக்கிறோம்.




மு. இராஜா., M.A.,B.Ed.,
[மொழி ஆய்வாளர்]
உடன் உலகத்தமிழ்க் கல்விக்கழக தமிழ் ஆசிரியர்கள்
மற்றும் வரைகலையாளர்கள்.



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.worldtamilacademy.com www.tamilacademy.com